From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 154/2011

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Father/Husband Name | : ராஜிவ் |
| Age | : | Calling | : |
| Date | : 08.12.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 08 day of 12.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது வையாபுரிபட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அசா1 எனது அக்கா மகள் மற்றும் என் மனைவியின் தங்கை, அசா3 அம்பிகா எனது மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 14 வருடங்களுக்கு முன்னர் பிரான்மலை கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. அசா1 ற்கும், 1ம் எதிரிக்கும் திருமண நாள் குறித்த பின்னர் அசா2 எனது அக்கா 1ம் எதிரியின் குடும்பத்தினர் ரூ.50 ஆயிரம் கேட்டதாகவும், அதை கொடுக்க வேண்டுமென்று என்னை அழைத்தார். நானும், அசா2ம் மேற்கூறிய பணத்தை 1ம் எதிரியிடமும், அவரது பெற்றோர்களிடமும் சென்று கொடுத்தோம். அதன்பின்னர் 1ம் எதிரி அசா1 டம் கூடுதல் நகை கேட்டதாக என்னிடம் அசா1ன் தந்தையும், அசா2ம் என்னிடம் சொன்னார்கள். பின்னர் அசா1ன் பெற்றோர்கள் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இதுசம்மந்தமாக புகார் கொடுத்தார்கள். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க அசா4 யை பகுதியாக பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டு அரசுதரப்பில்**

**குறுக்குவிசாரணை**

அசா1 ற்கும் 1 ம் எதிரிக்கும் விவாகரத்து ஆகிவிட்டதா என்றால் ஆகவில்லை. அசா1 ற்கும், 1 ம் எதிரிக்கும் பிறந்த குழந்தையை அசா1 தான் இன்னாள் வரை பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். னது கொழுந்தியா வேறு திருமணம் செய்துள்ளாரா என்றால் இல்லை. 1 ம் எதிரி வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து குழந்தையுடன் குடும்பமாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். எனது அக்கா அசா2 ன் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இன்னாள் வரை அசா1 ஆன எனது கொழுந்தியா குழந்தையுடன் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்மந்தமான விவரங்கள் அசா1 என்னிடமும் அசா3 மும், சொன்னார் என்றால் சரிதான். அசா2 ன் உடன்பிறந்த தம்பி என்பதாலும், அசா1 ன் உடன்பிறந்த சகோதரியை திருமணம் செய்துள்ளதால் அசா1 ன் குடும்பம் குறித்து அனைத்து விவரமும் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வஞ்சிநகரத்தில் உள்ள அசா1 ன் பெற்றோர்கள் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் இந்த வழக்கு சம்மந்தமாக திருமணம நடந்ததிலிருந்து புகார் கொடுத்தது வரை உள்ள அனைத்து விவரங்களையும் நானும், எனது மனைவி அசா3 ம் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

திருமணம் 2009 ம் வருடம் நடைபெற்றது என்றால் சரிதான். இன்னாளிலிருந்து சுமார் 17 வருடங்களுக்கு முன்னர் அசா1 ற்கும் 1 ம் எதிரிக்கும் திருமணம் ஆனது என்றால் சரிதான். 2011 ம் வருடம் அசா1 மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். சுமார் 17 வருடங்கள் ஆகிவிட்டதால் அன்றையதினம்

போலீசாரிடம் சொன்ன விவரங்களை இன்று இந்நீதிமன்றத்தில் நினைவுபடுத்தி சொல்ல இயலவில்லை என்றால் சரிதான்.

2009 ம் வருடம் பிரான்மலையில் வைத்து அசா1 ற்கும், 1 ம் எதிரிக்கும் திருமணம் ஆன போது 25 பவுன் நகையும், ரூ.1,30, 000/- மதிப்புள்ள வீட்டு உபயோக சீர்வரிசை பொருட்களும், கொடுத்தோம் என்றால் சரிதான்.

அசா2 எனது அக்கா 1 ம் எதிரி ரூ.50000/- கேட்டதாக முதல் விசாரணையில் கூறிய விவரம் 1 ம் எதிரி கணிணி கடை வைப்பதற்காக கேட்டது என்றால் சரிதான். 1 ம் எதிரி, 2 ம் எதிரி, 3 ம் எதிரி ஆகியோர் அசா1 ன் நகைகளை கேட்டு துண்புறுத்தியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 ம் எதிரி தினமும் குடித்துவிட்டு அசா1 யை கொடுமைபடுத்தினார் என்றும், அவர் அசா1 அணிந்திருந்த 5 பவுன் நகையை அறுத்து அவரது பெரியப்பா மகனான 6 ம் எதிரி விஜயனிடம் கொடுத்துவிட்டதாக போலீசார் விசாரணையில சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1 ம் எதிரி அசா1 டம் கூடுதல் நகையும், 1 லட்சம் பணமும் கொடுத்தால்தான் வாழ முடியும் என்று சொன்னதால்தான் அசா1 மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிதரப்பில் மறுவிசாரணை**

நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் வையாபுரிபட்டி. வையாபுரிபட்டிக்கும், வஞ்சி நகரத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 15 லிருந்து 18 கிமி இருக்கும். வையாபுரிபட்டியிலிருந்து வஞ்சிநகரத்திற்கு எந்த வழியில் வருவேன் என்றால் சிங்கம்புணரி, சுக்காம்பட்டி, கருங்காலக்குடி வழியாக வருவேன். மேற்கூறிய வழியாக வஞ்சிநகரத்திற்கு வருவதற்கு சுமார் 45 கிமீ ஆகும் என்றால் சரியல்ல.

நான் வையாபுரிபட்டியிலிருந்து வஞ்சிநகரத்திற்கு இடையே 17 கிமீ தூரம் இருப்பது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசா1ற்கும், 1ம் எதிரிக்கும் நடந்த திருமண்த்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். அவர்கள் திருமணத்தின்போது புகைப்படம் எடுத்துக்கொண்டார்களா என்றால் எடுத்துக்கொண்டார்கள். அந்த புகைப்படங்களை பார்த்தால் அசா1ற்கு எவ்வளவு நகை செய்தார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

2) திருமணத்தின்போது செய்த சீர்வரிசை பொருட்களை புகைப்படம் எடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணத்தின்போது செய்த நகை மற்றும் சீர்வரிசை பொருட்களின் விவரங்கள் புத்தகத்தில் எழுதினார்களா என்றால் எழுதினார்கள், மாப்பிள்ளை வீட்டில் கொடுத்துவிடுவார்கள். மேற்படி புத்தகத்தில் எழுதி பெண் வீட்டிற்கு ஒரு புத்தகமும், மாப்பிள்ளை வீட்டிற்கு ஒரு புத்தகமும் வைத்து கொள்வார்கள் நான் மாப்பிள்ளை வீட்டில் மட்டும் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படத்தையும், சீர்வரிசை செய்த புத்தகத்தை நீதிமன்றத்தில் கொடுத்தால் திருமணத்தின்போது எவ்வளவு நகை மற்றும் சீர்வரிசை செய்தார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அதனால்தான் மேற்கூறிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3) 1ம் எதிரி குடித்துவிட்டு வந்து அசா1ன் நகை கேட்டு துண்புறுத்தியதாகவும், அவரிடமிருந்து நகையை பறித்து 1ம் எதிரி, 2, 3, 7 ம் எதிரியிடம் கொடுத்தார் என்ற விவரத்தை அசா1 சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்கூறிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது, அசா1 சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். அசா1

அணிந்திருந்த 5 பவுன் தங்க நகையை அறுத்து 1ம் எதிரி 6ம் எதிரியான அவரது பெரியப்பா மகன் விஜயனிடம் கொடுத்ததாக சொன்ன விவரம் அசா1 சொல்லிதான் எனக்கு தெரியும், நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4) அசா1 மற்றும் 1ம் எதிரிக்கும் இடையே மேற்கூறிய பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் பெரியவர்களை வைத்து பேசினார்கள். மேற்படி பஞ்சாயத்து சமயத்தில் நான் அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். பஞ்சாயத்து எப்போது நடந்தது என்றால் இந்த வழக்கு கொடுப்பதற்கு முன்னர் பஞ்சாயத்து நடந்தது. 1ம் எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அசா1ற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் எனது போலீசார் விசாரணையில் 1ம் எதிரி அசா1யை தன்னுடன் வாழ வர சொல்லி அழைத்து வழக்கறிஞர் அனுப்பிய பின்னரே பஞ்சாயத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்கூறியவாறு எனது போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) மேற்கூறிய பஞ்சாயத்தில் அசா3 எனது மனைவியும் நானும் அசா1ன் வஞ்சி அனுப்பிவைத்தோம் என்றால் சரியல்ல, அவ்வாறு அசா1டம் தவறு இருந்ததால் தான் அவரை நாங்கள் வஞ்சி அனுப்பிவைத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்தில் என்ன முடிவு ஏற்பட்டது என்றால் சமரசம் பேசினோம், எதிரிகள் தரப்பினர்கள் நகைகள் கேட்டார்கள், அசா1 குடும்பத்தினர்கள் தரவில்லை. பஞ்சாயத்து நடந்தபோது அசா1 எத்தனை மாத கர்ப்பிணியாக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அசா1 பஞ்சாயத்து நடந்தபோது அவர் 8 மாத கர்ப்பிணியாக இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் அவர் கர்ப்பமாக

இருந்த விவரம் மட்டும் தெரியாது மாதம் தெரியாது.

6) 1ம் எதிரி பஞ்சாயத்துபடி நடக்க தயாராகத்தான் இருந்தார் அசா1 தான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டு பஞ்சாயத்துபடி நடக்கவில்லை என்றால் சரியல்ல, அசா1 வாழ தயாராகத்தான் இருந்தார். 1ம் எதிரி தனலெட்சுமியுடன் சேர்ந்து வாழ வழக்கு தொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் அசா1 சொன்ன விவரங்களையே சாட்சியமாக இன்று நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்த விவரத்தைதான் சொல்கிறேன். இந்த வழக்கு எந்த தேதியில் அசா1 புகார் கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. அசா1 புகார் கொடுத்த நாளுக்கு முந்தைய தினம் மாண்புமிகு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் 1ம் எதிரியுடன் அசா1 சேர்ந்து வாழ சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி சேர்ந்து வாழ சொல்லி மனுதாக்கல் செய்ததனால்தான் அசா1 இந்த புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி 2ம் திருமணம் செய்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். 2ம் திருமணம் சம்மந்தமாக 1ம் எதிரி மீது புகார் ஏதும் கொடுத்துள்ளோமா என்றால் கொடுக்கவில்லை. நான் 1ம் எதிரி பொய் குற்றசாட்ட வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய விவரங்களை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை, வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) 1ம் எதிரி அசா2டம் ரூ.50 ஆயிரம் பணம் கேட்ட விவரத்தை எனது போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். நான் அவ்வாறு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை, தற்போதுதான் புதிதான இந்நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அசா2டம் ரூ.50 ஆயிரம் பணம் கேட்டதன்

பேரில் நானும், அசா2ம் ரூ.50 ஆயிரம் 1ம் எதிரியிடம் கொடுத்தோம் என்ற விவரத்தை எனது போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை பின்னிட்டு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அவ்வாறு ரூ.50 ஆயிரம் கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

8) நான் எனது அக்கா மகள் அசா1ற்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 154/2011

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : அம்பிகா | Father/Husband Name | : கணேசன் |
| Age | : | Calling | : |
| Date | : 08.12.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 08 day of 12.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது வையாபுரிபட்டியில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா1 தனலெட்சுமி குடும்பத்தினரை எனக்கு தெரியும். அசா1 எனது சகோதரி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும்.

2009 ம் வருடம் ஆவணி மாதம் பிரான்மலையில் வைத்து அசா1 ற்கும் 1ம் எதிரிக்கும் பெரியவர்களை முன்னிலையில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது அவர்களுக்கு எங்கள் குடும்பத்தினர் 25 பவுன் நகையும், ரு.55 ஆயிரம் ரொக்கமாகவும், ரு.1,1/2 லட்சம் மதிப்புள்ள பண்ட பாத்திரம் கொடுத்தோம். திருமணம் முடிந்து குமுட்ராம்பட்டியில் உள்ள 1ம் எதிரியின் வீட்டில் அசா1ம், 1ம் எதிரியின் குடும்பத்தினருடன் வசித்து வந்தார். அசா1, 3 மாத கர்ப்பமாக இருந்த காலத்திலிருந்தே அசா1 ற்கும், 1ம் எதிரிக்கும் சிறு சிறு சண்டை ஏற்பட்டு வந்தது. 1ம் எதிரியும், ஆஜர் எதிரிகளும் அசா1டம் கூடுதல் வரதட்சணை கேட்டு கொடுமை செய்தார்கள். அதன்பின்னர், எனது தந்தையும், தாயும் இது குறித்து எதிரிகள் வீட்டிற்கு சென்று கேட்டார்கள். கூடுதல் வரதட்சணை

கேட்டு பிரச்சனை ஏற்பட்டதனால் 8 மாத கர்ப்பமாக இருந்தபோது அசா1 அவரது தாயார் வீட்டிற்கு வந்துவிட்டார். அதன்பின்னர், அசா1 தாயார் வீட்டிலேயே இருந்து விட்டார். அதன்பின்னர் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று அசா1 புகார் கொடுத்தார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அசா1ன் தந்தையும், அசா2யும் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1ற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் ஆவணி மாதம் 2009ம் வருடம். தேதி ஞாபகம் இல்லை. இந்த திருமணத்தை குறித்து என்ன விவரம் ஞாபகம் உள்ளது என்றால் திருமணத்தின்போது அசா1ற்கு 25 பவுன் நகை, 1,30,000/- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் செய்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி திருமணத்தின்போது 25 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் குறித்து புத்தகத்தில் எழுதிக்கொண்டோமா என்றால் எழுதிக்கொண்டோம். அந்த புத்தகம் எங்கு உள்ளது என்றால் எனது அம்மா அசா2 வீட்டில் உள்ளது. அந்த புத்தகத்தை பார்த்தால் திருமணத்தின்போது செய்த நகை, மற்றும் சீர்வரிசை குறித்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான்.

2) அசா1, 1ம் எதிரியின் வீட்டில் எவ்வளவு காலம் இருந்தார் என்றால் அசா1, 8 மாத கர்ப்பிணியாக இருந்தபோது 1ம் எதிரியின் வீட்டில் இருந்து வந்தார். 8 மாத கர்ப்பிணியாக அசா1, 1ம் எதிரியின் வீட்டில் இருந்து வருவதற்கு முன்னர் 1ம் எதிரியின் வீட்டில்தான் இருந்தார் என்றால் சரிதான். 8 மாதத்தில் வளைகாப்பிற்குதான் அசா1 அவரது தாயார் வீட்டிற்கு வந்தார் என்றால் சரியல்ல. அசா1, 8 மாத கர்ப்பிணியாக கோவித்துகொண்டுதான் அவரது தாயார் வீட்டிற்கு வந்தார் என்றால்

அசா1ற்கும், 1ம் எதிரிக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக அவர் வந்தார்.

3) அசா1ற்கும், 1ம் எதிரிக்கும் சிறு, சிறு சண்டை ஏற்பட்டதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் அது என்ன சண்டை என்றால் 1ம் எதிரி மற்றும் 2, 3 எதிரிகள் நகை அசா1னிடம் கேட்டது குறித்து சண்டை ஏற்பட்டது. அசா1 சண்டை ஏற்பட்டு அவரது தாய் வீட்டிற்கு வந்த பின்னர் 1ம் எதிரி சேர்ந்து வாழ கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. நாங்கள் அசா1 8 மாத கர்ப்பிணியாக அவரது தாயார் வீட்டிற்கு வந்த பின்னர் பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை. அசா1 8 மாத கர்ப்பிணியாக இருந்தபோதும் பஞ்சாயத்து நடந்து 3 மாத காலத்திற்குள் நகைகளை திருப்பி தர வேண்டும் என்றும், குழந்தையை அழைத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் பஞ்சாயத்தில் பேசி முடிவு செய்தோம் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, எனது தந்தைக்குத்தான் தெரியும்.

4) நான் எனது முதல் விசாரணையில் கூடுதல் வரதட்சணை 1ம் எதிரியும், அவரது குடும்பத்தினர் கேட்டதாக சொல்லியுள்ளேன், எங்கு வைத்து, எவ்வளவு கேட்டார்கள் என்றால் 1ம் எதிரியின் வீட்டில் வைத்து கேட்டார்கள், தேதி தெரியவில்லை. கூடுதல் வரதட்சணை கேட்டபோது அங்கு யார் உடன் இருந்தார்கள் என்றால் அசா1, அசா2, அசா1ன் தந்தை அங்கு இருந்தார்கள். கூடுதல் வரதட்சணை கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, எனது தந்தையும், எனது தாயார் அசா2ம் சொல்லிதான் தெரியும். எப்போது என்னிடம் இதுகுறித்து அசா2, எனது தந்தையும் எங்குவைத்து, எப்போது, என்ன வழியில் சொன்னார்கள் என்றால் 15 வருடங்களுக்கு முன்பு நடந்ததால் தேதி ஞாபகத்தில் இல்லை, எனது தந்தையின் வீட்டில் வைத்து சொன்னார். அவ்வாறு 1ம் எதிரி கூடுதல் வரதட்சணை கேட்கவில்லை,

என்னிடம் அசா1, அசா2, எனது தந்தை இதுகுறித்து சொல்லவும் இல்லை, நான் வழக்கிற்காக பின்னிட்டு இந்நீதிமன்றத்தில் நான் தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கூறிய விவரத்தை முதன்முறையாக தற்போதுதான் இந்நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரிதான்.

5) எனது முதல் விசாரணையில் எனது தந்தையும், தாயும் இதுகுறித்து எதிரிகள் வீட்டிற்கு சென்று கேட்டார்கள், பிரச்சனை ஏற்பட்டது என்ற விவரம் எனது தாய், தந்தை சொல்லிதான் தெரியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அசா1யும், 1ம் எதிரியையும் சேர்ந்து வாழ வைக்க ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் 1ம் எதிரிக்கு மறு திருமணம் ஆகி குழந்தை உள்ளது, அதனால் எங்களால் எதுவும் செய்ய இயவில்லை. 1ம் எதிரியுடன் அசா1ற்கு சேர்ந்து வாழ விருப்பம் இல்லை அதனால்தான் 1ம் எதிரிக்கு 2வது திருமணம் நடந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அசா1 உடன் சேர்ந்து வாழ பரிகாரம் கோரி மாண்புமிகு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்கூறிய விவரத்தை எனது சகோதரியான அசா1 ஆன எனது சகோதரி சொன்னாரா என்றால் தெரியவில்லை. அசா1ற்கு மேற்கூறிய வழக்கு குறித்த விவரங்கள் தெரியும், எனக்கும் தெரியும், அசா1 வாழ விரும்பாததால்தான் இந்த புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6) 1ம் எதிரி அசா1 உடன் சேர்ந்து வாழ தயாராகத்தான் உள்ளார் என்றால் சரியல்ல, நான் மேற்கூறிய சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, நான் பின்னிட்டு நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.